அசல்

63

7/9/98 சொ. வேதாசலம்

அசல் -1 நகல் -1

(மணிமேகலை)

உ

திருச்சிற்றம்பலம். சென்னை: 7/9/98

அன்புள்ள ஐயா அவர்களது திவ்விய சமுகத்திற்கு அநேக நமஸ்காரம். உபயக்ஷேமம். நான் சென்ற திங்கட்கிழமை அனுப்பிய (மணியார்டர்) ரூபா ஐந்தும் தங்களுக்குக் கிடைத்திருக்கலாம். விலைப் பொருள் கொடுப்பதற்கு முன்னமே எனக்குப் புத்தகமுதவிய தங்களதன்புடைமைக்குத் தங்களை மனமொழிமெய்களாலும் வணங்குவதல்லது வேறு கைம்மாறறியேன். இப்பேருதவியால் 'மணிமேகலை'யில் 'சிறைவிடு காதை' வரையில் படித்தறிந்து கொண்டேன். நுண்ணுணர்வானும், சங்கச் செய்யுட் பயிற்சி மிகுதியானும், ஆராய்ச்சி வகையானும் பெரிதும் உழைப்பெடுத்தெழுதப்பட்ட 'மணிமேகலையுரைப் பொழிவு' பெரிதும் நன்கு மதிக்கத்தக்கது. ஸ்ரீமத் பாலசுந்தர முதலியாரவர்கட்குத் தாங்கள் நேரே ஒரு பிரதியனுப்பினால், அதன் விலையையனுப்பி விடுவதுமல்லாமல் அது விலைப்படும் விஷயத்திலும் அவர் வேண்டியவை செய்வாரென்று தோன்றுகிறது. நானும் இவ் விஷயத்தில் என்னாற் சொல்லக்கூடியவளவு அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். தங்கள் தேகவாரோக்கியத்தைத் தெரிவிக்கும்படி பெரிதும் பிரார்த்திக்கிறேன். இனித் தாங்கள் பதிப்பிக்கக் கருதிய நூல் இன்னதென்றறிய வேண்டுகிறேன். நமஸ்காரம்.

அடியேன்,

சொ. வேதாசலம்.


அசல்

(63)

7/9/98 சொ. வேதாசலம்

அசல் -1 நகல் -1

(மணிமேகலை)


EAST INDIA POST CARD

THE ADDRESS ONLY TO BE WRITTEN ON THIS SIDE

QUARTER ANNA

SOWCARPET 8 SE. 9[8] 5 45 PM

KUMBAKONAM 10 SE. 98

Brahma Sri,

V. Swaminatha Iyer Avergal,

Tamil Pandit,

Government College,

Kumbakonam.

நகல்

7/7/48.

அன்புள்ள ஐயா அவர்களது திவ்விய சமுகத்திற்கு
அநேக நமஸ்காரம். உபய க்ஷேமம். நான் சென்ற
திங்கட்கிழமை அனுப்பிய (மணியார்டர்) ரூபாயைந்தும்
தங்களுக்குக் கிடைத்திருக்கலாம். விலைப்பொருள் கொ
டுப்பதற்கு முன்னமே எனக்குப் புத்தகமுதவிய தங்
களதன்புடைமைக்குத் தங்களை மனமொழி மெய்களாலு
ம் வணங்குவதல்லது வேறு கைம்மாறறியேன். இப்பெருத
வியால் மணிமேகலையில் "சிறைவிடுகாதை" வரையில்
படித்தறிந்து கொண்டேன். நுண்ணுணர்வானும், சங்கச்
செய்யுட் பயிற்சி மிகுதியானும், ஆராய்ச்சிவன்மையா
னும், பெரிதும் உழைப்பெடுத்தெழுதப்பட்ட 'மணிமேகலை
யுரைப்பொலிவு" பெரிதும் நன்கு மதிக்கத் தக்கது. ஸ்ரீமத்
பாலசுந்தரமுதலியாரவர்கட்குத் தாங்கள் நேரே ஒரு
பிரதியனுப்பினால் அதன் விலையை யனுப்பிவிடுவது
மல்லாமல், அது விலைப்படும் விஷயத்திலும் அவர்
வேண்டுவன செய்வாரென்று எண்ணுகிறேன்
நானும் இவ்விஷயத்தில் என்னாற் சொல்லக்கூடிய வளவு
அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். தங்கள் தேக
சௌக்கியத்தைத் தெரிவிக்கும்படி பெரிதும் பிரார்த்
திக்கிறேன். இனித் தாங்கள் பதிப்பிக்கக் கருதிய
நூல் எதுவென்றறிய வேண்டுகிறேன். நமஸ்காரம்

அடியேன்

சொ. வேதாசலம்

நகல்

ஸ்ரீ S. Vedachalam

சை. வேதாசலம்

7-9-1898

Madras

மனை வேலை - [illegible]

✓

H. 23. 24.

44